திருமந்திரச் சிந்தனைகள்

திருமூலர் சங்கத்தின் காப்பாளர்

திரு.சி. இராமநாதன் அவர்களது

86வது பிறந்த நாள் நினைவு வெளியீடு



PUBLISHED IN COMMEMORATION OF MR. S. RAMANATHAN
PATRON OF THIRUMULAR SANGAM - BAMBALAPITIYA
ON HIS 86TH BIRTHDAY
DATE OF BIRTH : 2ND DECEMBER 1912.

திருமந்திரச் சிந்தனைகள்

அருட்திரு சி. இராமநாதன் அவர்கள்
மெய்ஞ்ஞானத் தெளிவும், ஆத்மஞான அனுபூதியும்
பெற்று திருமந்திரத்தின் உட்பொருளை
தன்னிலேயே மெய்ப்பொருளாகக்
கண்டு தெளிந்த தத்துவ வித்தகர். அன்னாரது
எண்பத்தியாறாவது அகவை நினைவுகூர்ந்து
அவர்களுக்கு நல்வாழ்த்துகள் கூறுவதோடு
அவரது சிந்தையில் மலர்ந்த
திருமந்திரக் கருத்துகளையும் மற்றும்
அவர் பற்றிய செய்திகளையும் பயனுள்ள
கருத்துரைகளையும் தொகுத்து சிறு மலராக
வெளியிடுகிறோம்.

உண்மை (உள்+ மெய்) ப் பொருளை அறிந்து
ஆதியோடு கலந்து நிறைவு காண விளையும்
ஆர்வலர்க்கு இது ஒரு நற்றுணைவன்.

வெளியீடு:
திருமூலர் சங்கம்
3, ரிச்வே பிளேஸ்,
கொழும்பு - 4.

"எல்லாம் சிவமயமே"
"அனைத்தும் ஒன்றில் அனைத்திலும் ஒன்றே"

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசகம் என்று உணர்.

நல்வழி

சைவ சமயமே சமயஞ்
சமயா தீதப் பழம் பொருளைக்
கைவந்திடவே மன்றுள் வெளி
காட்டும் இந்தக் கருத்தை விட்டுப்
பொய் வந்துழலுஞ் சமயநெறி
புகுத வேண்டாம் முத்தி தரும்
தெய்வ சபையைக் காண்பதற்கு
சேரவாரும் சகத்தீரே.

காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர்
அகண்டாகார சிவ
போகமெனும் பேரின்ப வெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏகவுருவாய்க் கிடக்கு தையோ
இன்புற்றிட நாம் இனியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
சேரவாரும் சகத்தீரே.

தாயுமான சுவாமிகள்

திரு. சி. இராமநாதன்

(ஓய்வுபெற்ற வெளிநாட்டு நிர்வாக அலுவலகர்)



பிறந்த திகதி: 2-12-1912

பிறந்த இடம்: முல்லைத் தீவு

தகப்பன் பெயர்: சண்முகம் சின்னையா

தாய் பெயர்: கணபதிப்பிள்ளை சிவக்கொழுந்து



Mr. S. Ramanathan

Mr. S. Ramanathan had truly involved himself in the study and search for the truth in Thirumantiram Consisting of 3000 verses writen by Saint ThiruMoolar over 8000 years ago.

From the letters of correspondances appreciating his work on Thirumanthiram it reveals that at least over 30 years of his life had been fully devoted and he is steeped in Thirumanthiram.

We detail a few letters received by him in the following pages.

शिवः सर्वगतं प्रेम परं सत्यं परः शिवः

அன்பே சிவமயம் சத்தியமே பரசிவம்

Saiva Siddhanta Church — Founded 1949

Himalayan Academy — Founded 1957

Hinduism Today — Founded 1979

Hindu Heritage Endowment — Founded 1995

A Message from Satguru Sivaya Subramuniyaswami,
162nd Jagadacharya of the Nandinatha Sampradaya's Kailasa Parampara

Kauai Aadheenam, 107 Kaholalele Road, Kapaa, Hawaii 96746-9304 USA
Phone: 1-808-822-3012, Fax 1-808-822-4351 • internet: Gurudeva@HinduismToday.kauai.hi.us
World Wide Web home page: http://www.HinduismToday.kauai.hi.us/ashram/Gurudeva.html

Many blessings from the Kauai Aadheenam Pitham of the Kailasa Parampara to the members of the Thirumoolar Sangam on the occasion of the 86th birthday of Thiru S. Ramanathan, the Sangam's Guru.

Thiru S. Ramanathan's significant efforts in promoting Thirumantiram are to be congratulated, and we hope will continue for many more years to come. Spreading knowledge of the great scripture Thirumantiram and its teachings is indeed important for perpetuating the deepest perspectives on Saiva Siddhanta, that Jiva is in fact Siva, that there is no difference between Vedanta and Siddhanta and that the practice of yogic meditation is required for the highest realizations and attainment of moksha. All these teachings, of course, were again spoken in recent times by the great jnani of Sri Lanka, Siva Yogaswami, who Thiru Ramanathan was privileged to personally know.

May all who attend this 86th birthday celebration have their resolve strengthened to progress steadily on the fourfold path, so exquisitely described by Thirumoolar, of Charya, Kriya, Yoga and Jnana leading to moksha, liberation from rebirth on this planet.

Blessings from this and inner worlds,

[signature]

Satguru Sivaya Subramuniyaswami
Jagadacharya Nandinatha Sampradaya
Kauai Aadheenam, Hawaii, USA

Note:

Fax message received from
Kauai Adeenam dated 30-11-1998
is not clear and retyped overleaf.

A MESSAGE FROM SATGURU SIVAYA SUBRAMUNIYASWAMI

162nd Jagadacharya of the Nandinatha Sampradaya's Kailasa Parampara
Kauai Aadheenam, 107, Kaholalele Road, Kapaa, Hawaii 96746-9304 USA
Phone: 1-808-822-3012. Fax: 1-808-822-4351
Internet: Gurudeva @ Hinduism Today.kauai.hi.us
W.W.W.home page: http:/www.Hinduism Today.kauai.hi.us./ashram/
Gurudeva.html

Many blessings from the Kauai Aadheenam Pitham of the Kailasa Parampara to the members of the Thirumoolar Sangam on the occasion of the 86th birthday of Thiru S.Ramanathan, the Sangam's Guru.

Thiru S.Ramanathan's significant efforts in promoting Thirumantiram are to be congratulated, and we hope will continue for many more years to come, Spreading knowledge of the great scripture Thirumantiram and its teachings is indeed important for perpetuating the deepest perspectives on Saiva Siddhanta, that Jiva is in fact Siva, that there is no difference between Vedanta and Siddhanta and that the practice of yogic meditation is required for the highest realizations and attainment of moksha. All these teachings, of course, were again spoken in recent times by the great jnani of Sri Lanka, Siva Yogaswami, who Thiru Ramanathan was privileged to personally know.

May all who attend this 86th birthday celebration have their resolve strengthened to progress steadily on the fourfold path, so exquisitely described by Thirumoolar, of Charya, Kriya, Yoga and Jnana leading to moksha, liberation from rebirth on this planet.

Blessings from this and inner worlds,



Dr. B. Natarajan.

76, HARRINGTON ROAD,
MADRAS 600 031,
Phone: 665098

14 - 07 -'82.

To:
Mr. S. Ramanathan,
30 Lake View Drive,
TEXAS 77551,
U.S.A.

Dear Mr. Ramanathan,

I thank you for your kind letter dated 29-6-'82. I am sorry I was not here you called last March. I trust when you return to Sri Lanka you will pass through Madras, and I can look forward to a very interesting chat with you on the important subject of mutual interest, namely, "Thirumanthiram". I feel our meeting will help me understand many engmatic passage's in that work, which I have been striving to grapple with for many years.

Perhaps you may also visit "Kadavul Temple" at Hawaai and meet Swami Sivaya Subramuniya, who has taken great pains to present "Thirumoolar" to the modern world.

I am to say to that I was agreeably surprised and happy when I received your letter with its appreciative references to my work.

Yours sincerely,

(B. NATARAJAN)

உ
Om Sivamayam!

SAIVA SIDDHANTA CHURCH

POST OFFICE BOX 10, KAPAA, HAWAII, USA 96746

Rev. Swami Sivasiva Palaniswami

Kauai Aadheenam
November 24, 1984

S,Ramanathan
13814, Abinger Court
Little Rock
Arkansas 72212

Vanakkam and aloha, most respect Thiru Ramanathan,

It is a joy to be writing to you after a long time. Your many letters and philosophical entries have arrived here safely and we have relished each one. Please forgive our long lapse in responding.

All is well at Kauai Aadheenam. Gurudeva has just returned from a trip to San Francisco, and is now busy working most directly, in various writing endeavors, including future lessons of the San Marga Master Course.

Yesterday we received the letter in which you stated that Mr. Palasuntharam has finally responded to your letters. Gurudeva was very happy to hear that a true dialogue has now begun between the two of you. Know that he is very pleased that you have personally taken up the duty of speaking with Palasuntharam on these important philosophical issues in defense of monism and in refutation of the arguments is his booklets. Myself and all of the swamis feel that Lord Siva has sent you personally as an ambassador to help revive and restore the original meaning of the sacred verses of Thirumoolar in his Thirumanthiram.

We are also making copies of several of your other papers including your most recent letter to Palasuntharam of Nov. 15, your letter to Palasuntharam of July 4, your letter to Palasuntharam of June 24 (which we are also sending to Palasuntharam your dissertation shakthi - consort of Siva." and "Perairaver - The ONE with Thousands of names." Two copies of each of these are also enclosed for your use.

Gurudeva is most pleased that you are intent on meeting personally with Mr. Palasuntharam and Mr. Kandiah in Singapore. Let us hope that they are amenable to the conference. As a result of the healthy controversy, these subtle and transcendental areas of thought are being discussed and considered by hundreds of Saivites. through the debates, each side is learning more and being drawn more deeply into philosophy, religion and yoga, to think of God Siva, and to try to discover for themselves the truth of which schlolars and yogis speak.

Also enclosed is the Insight section of the latest edition of The New Saivite World. In it we have attempted a brief but comprehensive presentation of monistic theism / Saiva Siddhanta which can be understood by the average reader and devotee. We hope you enjoy it and look forward to your comments. Again we wish to thank you ever so much for your indefatigable efforts in clarifying the disputed verses of the Thirumanthiram. When the time comes that we are able to address oursleves to the editing of Dr. Natarajan's translation, your commentaries will be vital.

Gurudeva sends his blessings to you, for a safe journey and is looking forward to seeing you here on your return flight. He encourages you to continue to be strong in the Love of our Supreme God Siva -- the creator and the creation.

SAIVA SIDDHANTA CHURCH
Servant of the Servants of Lord Siva,

Rev. Swami Sivasiva Palani.

P. Pandian

4-A, NEW TOWER BLOCK,
TURN BULLS ROAD, NANDANAM,
MADARAS -35.
DATE: 12/07/1986.

Mr. Ramanathan,
22, Alexandra Road,
Colombo - 06,

Dear Thiru Ramanathan,

Received your typed manuscript sent to me sometime back. This is useful to our project very much.

I am very glad to tell you that the Tamil University, Thanjavur is taking up a Project of Thirumanthiram Translation in three volumes under the chairmanship of Thiru T. V. Venkatraman, I.A.S. Special Commissioner and Secretary to Government, Home Department. The University has also requested me to go over there for a dialogue in their telegram dt.23/06/86. I went there and had a preliminary discussion with the Vice-Chancellor about the Project. I will be in charge of the literary aspect of the Thirumanthiram. I also discussed with the Vice-Chancellor that I should be given freedom to form my own Committee and to choose the competent men for this Project. In my Committee you will occupy a very important place.

The University will establish the centre at Kancheepuram very shortly. Kindly wait for the written communication from the Committee which is awaiting the approval of the Government. Your life's ambition, dream is about to be fulfilled. Therefore, brace up and be cheerful and prepare yourself ready for the great work. Meanwhile you can go on doing the rough translation as you have done so and send it to me. But primarily I would request you to confine yourself only to the select verses which you have sent already. You can also prepare a glossary of mystic words in Tamil and English to equivalent. My kind enquiries to Manoharan and Mrs. Manoharan Anandakadakshini.

Yours Sincerely,
(P. PANDIAN)

கொழும்பு தமிழ்ச் சங்கம்,

7,57ஆம் ஒழுங்கை,
கொழும்பு - 06.
தொலைபேசி : 583759.
02 - 10 - 1090.

திரு. சி. இராமநாதன் அவர்கள்,
தலைவர்.
திருமூலர் சங்கம்,
கொழும்பு.

ஐயா,

"திருவள்ளுவரும் திருமந்திரமும்" என்னும் தங்கள் வெளியீடு கிடைத்தது. அரிய பல உண்மைகள் இவ்வெளியீட்டில் உள்ளன. இதுபோன்ற பல வெளியீடுகளை வெளியிட்டிருக்கிறீர்கள். திருமந்திரம் பெரும் அறிவுக் களஞ்சியம். வாழ்வாங்கு வாழ்வதற்கு உரிய அனைத்து அறிவுரைகளும் வழிகளும் திருமந்திரத்துள் உள்ளன. தமிழுக்கு மிகப் பெருமை தரும் நூல் திருமந்திரம். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை நெறிகளும் திருமந்திரத்துள் உள்ளன. அனைத்து நூல்களாலும் பெறும் பயனைத் திருமந்திரத்தாற் பெறலாம்.

பெருஞ் சிறப்பும் பயனும் உள்ள இந்நூலைப்பலர் அறியாமலும் பயன்படுத்தாமலும் உள்ளனர். கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்காக அலைந்து திரிபவரைப்போலத் தமிழர் இன்று உள்ளனர். திருமந்திரம் விளங்குதற்குக் கடினமானது எனவும் சிலர்தான் அதனைப் பயன்படுத்தலாம் எனவும் பலர் நினைக்கின்றனர்.

தாங்கள் திருமந்திரத்தின் பெருமைகளையும் பயன்களையும் பரப்பும் பணியிற் பல ஆண்டுகளாக ஈடுபட்டு வருகிறீர்கள். திருமந்திர உண்மைகளை அனைவரும் அறியும்படி எளிமையாக உரையாற்றியும் எழுதியும் வருகிறீர்கள். திருமந்திரம் அனைவர்க்கும் உரியது என்பதை உணரச் செய்கிறீர்கள். திருமந்திரத்தின் பயன்களை வெளிநாடுகளிலும் பரப்பும் பணியில் ஈடுப்பட்டிருக்கிறீர்கள். இப்பணிக்காகவே தங்கள் வாழ்வு அமைந்துள்ளது.

தங்கள் பணி மிகமகத்தானது தங்களால் எங்கள் நாடு பெருமை பெறுகிறது. தங்கள் பணியைக் கொழும்புத் தமிழ்ச் சங்கம் பாராட்டுகின்றது. இப்பணி வளர்க என வாழ்த்துகின்றது. திருவருள் என்றும் எங்கும் துணை செய்க என வேண்டுகின்றது.

தங்கள் அன்புள்ள
க.இ.க.கந்தசுவாமி,
பொதுச் செயலாளர்.

T. V. VENKATARAMAN I.A.S.
Chairman and Managing Director

Tel off: 471918
TAMILNADU ENERGY
DEVELOPMENT AGENCY
"Jhaver Plaza" IV Floor
1A, Nungambahham High Road,
MADRAS 600 034.

Dated. 02.01.1991.

To:
Thiru S. Ramanathan,
22, Alexandra Road,
Wellawatta,
Colombo - 06.
Sri Lanka.

Dear Sir,

I am grateful to you for your kind letters. I have seen your papers. It is admirable that you should be carrying on this great task with such spirit and fervour particularly at a time when humanity seems to be going in the opposite direction. The most engaging aspect of Thirumanthiram is its mysticism. That is the reason why its value to Saivism is all the greater. It is the mystical aspect of Saivism that makes it a truly great religion in the world. So whenever I find time, I have been pondering over the mystical message of Thirumanthiram. This I am doing without a teacher. I pray to God that you will be active for many more years, so that you can continue to transfer the messages of Wisdom culled out from Thirumanthiram from time to time to people like us who would like to pursue this subject with great eagerness. Please be in touch with me.

Kind regards.

Yours sincerely
(T. V. Venkataraman).

N. JEEWESHWARA
ATTORNEY -AT- LAW & NOTARY PUBLIC

"Thiruvarul Vasam"
Mavittapuram
Tellippalai.
11-3-1992

To:
Thiru S. Ramanathan,
22, Alexandra Road,
Wellawatta, Colombo - 6.
SRI LANKA.

My dear Ramanathan,

I wish to acknowledge receipt of your letter of 20.10.91 which was received by me long ago. Kindly accept my apologies for not replying. I went through your letter & I am still preserving it for the deep philosophical insight you have expressed therein.

Recently I met Mr. A. Kumaraguru who informed me that he met you in Colombo & that you showed my epistle to him. I also showed your letter to Mr. Yohanathan.

In your letter you stated that Mrs. Kalyanasundram told you that she sent some books to you about a month back, but so far I haven't received any. Probably it may have lost in transit while through the post.

I'm very much grateful to you for sending me the photostat copies of your articles. I also remember reading your articles இந்து கலாச்சாரம் இரண்டாவது ஆண்டு மலர். A copy of which I received from the editor.

Incidently I have also been in contact by past with சித்தாந்த சுடரொளி நா. செல்லப்பா, Mr. Yoganathan inform me that he too meets you in Colombo for spiritual discussions, discourses etc.

Kindly convey my warmest regards to him too.

With best wishes,

Cordially,
ஜீவேஸ்வரா.

Mr. T. V. VENKATARAMAN, I.A.S.,
CHIEF SECRETARY- GOVT.OF TAMIL NADU

SECRETARIAT.
MADRAS - 600 009.
24. 06. 92.

Thiru S. Ramanathan,
22, Alexandra Road,
Wellawatta, Colombo - 6.
SRI LANKA.

Dear Thiru Ramanathan,

Thank you very much for your letter of 17th June, 1992. I had been receiving all your works and your manuscripts from time to time. I am fully satisfied that they contain very great mystic as well as spiritual material in the finest traditions of "Thirumanthiram". I have no doubt that God will help us one day to bring this wonderful work to the people through the media of print. I am yet to go through all your papers and apply my mind owing to preoccupations. However, I think I am getting the necessary incentives now to go through them. I propose to utilise these materials in my articles in "Thirukkoil". Thanks to you, I will be knowing "Thirumanthiram" better. I marvel at your capacity to write so much.

I am preserving all the papers which you have sent to me. I hope one day they will be published. I will hand them over to Yogasana Alayam who can publish your valuable works. The whole world is beholden to you for your contribution to Tirumanthiram.

Please be in touch with me and send me more of your materials.

With very kind regards,

Yours sincerely,
T. V. Venkataraman.

திருமந்திர சங்கத்தின் மதிப்பார்ந்த காப்பாளர் அருட்திரு சின்னையா இராமநாதன் அவர்களது 86வது பிறந்த தினத்தில் (2-12-1998)

ஒரு வாழ்த்து

தமிழ் கூறும் நல்லுலகம் ஓதி உய்திபெற
அமிழ்தத் தமிழில் மூலன் ஆக்கிய திருமந்திரம்
ஆரும் அறிய மறைபொருள் கருத்தை
அகிலம் அறியத்தந்த ஐயனே வாழ்க!

திரிகால ஞானியாம் சிவயோக சுவாமி
திருமந்திரத்தை "நற்சிந்தனை" ஆக
அரிய தமிழில் அருளிய பெற்றியை
ஆராய்ந்துரைத்த ஐயனே வாழ்க!

திருமூலர் வாக்கும் சிவயோகர் வாக்கும்
இருநூலாயினும் ஒரு வாக்கென்ற
பெருமையை விளக்கும் பேறுபெற்றுய்ந்த
பெருமகன் இராமநாதன் புகழ் என்றும் பொலிக!

சைவத்தை வகுத்த தனிப்பெரும் நூலை
பல்வேறு கோணத்தில் அலசி ஆராய்ந்து
சொல்வேறு பொருள்வேறு கேண்மை நயந்து
நல்லோர் போற்றவாழ் நாதனே வாழ்க!

தள்ளாத வயதிலும் கொள்ளாத வாஞ்சையுடன்
அள்ளிக் கொடுக்கும் அமுதக் கருத்துக்கள்
கொள்ளக் கிடைக்கா கொள்முதல் கொடையாம்
வள்ளன்மை பூண்ட வள்ளலே வாழ்க!

திருமதி. செல்வம் கலியாணசுந்தரம்
தலைவி - திருமூலர் சங்கம்
3, ரிச்வே பிளேஸ், கொழும்பு - 4.

………………….உங்கள் திருப்பணி என்றென்றும் தொடரட்டும்

ஒரு வாழ்த்து

திருமந்திரத்தின் பொருள் உரைத்து
அருள் புரிய உள்ளங் கொண்ட ஐயா
இருள் நிறைந்த உள்ளங்களில்
அருளொளி யேற்றும் உங்கள்பணி
என்றென்றும் தொடரட்டும்.

அருமருந்தாம் திருமந்திரத்தின்
கருப்பொருளை நூல் உருவில்
உருவாக்கும் உத்தமரே ஐயா
மருள் நீக்கும் உங்கள் திருப்பணி
என்றென்றும் தொடரட்டும்.

இருதய நோயை வருமுன் விரட்டும்
அருமருந்தாம் திருமந்திரத்தின் உட்
பொருள் உணரவேண்டி இப்
பெருநூலை வெளியிடும் உங்கள்பணி
என்றென்றும் தொடரட்டும்.

திருமூல முனிவரின் மந்திரங்கள்
தரும் பயனைத் தானும் பருகியது போலத்
தரணியில் அனைவருக்கும் அதைப்
பருக்க உள்ளம் கொண்ட உங்கள்பணி
என்றென்றும் தொடரட்டும்.

இருநாற்பத்தி யாறாம் ஜனனதினத்தில்
திருமந்திரத்தின் உயர் சிந்தனைகளை
புரிந்திடவைக்கும் இந்நூற் சுவடியினை
உருவாக்கித் தருமுங்கள் நற்பணி
என்றென்றும் தொடரட்டும்.

- அருளானந்தா

குரு.......?

உலகில் பிறப்பெடுத்த எவருக்கும் மூன்று குரவர்கள் இருப்பார்கள். தாய் எமக்கு இந்த உடலைத் தந்தவள்; தந்தை எமக்கு உயிரைத்தந்தவன்; குரு எமக்கு அறிவையும் தெளிவையும் தந்து, பிறவிப்பயனை பூரணமாக நுகரச் செய்கிறான். அந்தக் குருவைப் பற்றி பலரும் பலவாறாக போற்றித் துதித்து மகிழ்ந்திருக்கிறார்கள்.

உலககுரு ஒருவன் இறைவன் அவனருளால்
பலபொருளும் பாரில் உள. - பேரின்பக் குறள்

உலகம் உய்யும் பொருட்டு குருவாக வந்து அருள் புரிபவன், பிரபஞ்ச உற்பத்திக்கு காரணனான ஆதிமூலமான இறைவனே (சிவனே)

ஆதிபரம்பொருளைப் பற்றி அருவவழி
ஓதிடுவர் உண்மைக் குரு. - பேரின்பக் குறள்

இவன் ....

ஆதியான மெய்ப் பொருளைப் பற்றி அருவமயமான வெட்டவெளிக்குள் தானே தானாய் இருக்கும் வழியைப் புகட்டுவான்.

பற்றற்று இறைவன் இணையடியை பற்றுமென
மற்றவர்க்கும் சொல்வர் குரு. - பேரின்பக் குறள்

மேலும் ....

உலக வியபகாரங்களில் செல்லும் மனத்தினை அடக்கி அகத்தினுள் உறுபொருளாக விளங்கும் இணையடியாக இயங்கா நிற்கும் நடுநாடியை பற்றிக்கொள்ள வழிகாட்டி நிற்பான்.

போக்குவர வற்ற பூரணத்தில் ஒன்றாகி
வாக்குமன மற்று உள்இரு. - பேரின்பக் குறள்

சலன்மற்று ஓங்காரமாகிய பூரணத்தில் ஒன்றி பேதமற்று தானே அவனாய், அவனே தானாய், தானேதானாய், ஏகாக்கிர நிலைநின்று வெட்ட வெளிக்குள்ளே சுகங்காணச் செய்பவனும், சுகமயமாய் இருப்பவனும் அவனே என்று அருட்திரு சித்ர முத்தடிகளார் பேரின்பக் குறள் வழியாகக் கூறுகிறார்.

திருமூலரும் தமது திருமந்திரத்தில் குருவைப் பற்றி:

குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென்பது குறித்து ஓரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரைஉணர்வு அற்றதோர் கோவே. 1581

சிவமே குருவும், கோனும், பேச்சற்ற பூரணமுமாய் விளைவது.

தாள்தந்து அளிக்கும் தலைவனே சற்குரு
தாள்தந்து தன்னை அறியத் தரவல்லோன்
தாள்தந்து தத்துவா தீதத்துச் சார்சீவன்
தாள்தந்து பாசந் தணிக்கும் அவன்சத்தே. 2049

இணையடி தலை வைத்து என்னை எனக்கறிவித்து முன்னை வினை நீக்கி பாச நாசனாய் விளங்குபவனே குரு..

வரும்வழி போம்வழி மாயா வழியைக்
கருவழி கண்டவர் காணா வழியைப்
பெரும்வழி யாநந்தி பேசும் வழியைப்
குருவழி யேசென்று கூடலுமாமே. 2056

மீண்டும் பிறப்பதாகிய கருவழியைக் காண்பவர் காணமுடியாத பெருவழியாம் நந்திகூறும் நடுவழியை அடையச் செய்பவன் குரு.

குருவென் பவனே வேதாகமம் கூறும்
பரவின்ப னாகிச் சிவயோகம் பாவித்து
ஒருசிந்தை இன்றி உயர்பாசந் நீக்கி
வருநல் குரவன்பால் வைக்கலு மாமே. 2057

பாசத்திினின்றும் நீக்கி வேதாந்த முடிவான பரவின்ப சிவயோக மாகி சிந்தையை அடக்கி சிவமாய் விளங்கச் செய்பவன் குரு..

குருவழி யாய குணங்களில் நின்று
கருவழியாய கணக்கை அறுக்க
வரும்வழி மாள மறுக்க வல்லார்கட்கு
அருள்வழி காட்டுவது அஞ்செழுத்தாமே. 2705

பிறவிக்கு காரணமான பற்றினை நீக்கி மரணத்தை வெல்ல முனைபவர்கட்கு அஞ்செழுத்துமே குரு வழியாகும். தமது அனுபவத்தை விளக்குகிறார்.

- அடியார்க்கடியன்

சிற்றம்பலம்

திருமந்திரம் கூறும் விளக்கம்

சிற்றம்பலம் என்னும் சொல் சைவ சமயத்தவருக்கு மிக புனிதமான ஒன்று. தேவார பாராயணத்திற்கு முன்னும் பின்னும் இது கூறப்படுவது மரபு. சிலர் தம் பிள்ளைகளுக்கு இதனை பெயராக வைத்து நித்தம் அழைத்து மகிழ்வதுமுண்டு. இந்த சிற்றம்பலம் என்னும் சொல்லுக்கு சைவ சமயத்தை வகுத்த ஆதி நூலான திருமந்திரம் பற்பல பொருள் தரும் சொற்களால் விளக்கியுள்ளது. சீவனை ஆத்மா-உயிர் பிராணன் என்றும் கூறுவது போல சிற்றம்பலத்தை சிதம்பரம், சித்தாகாசம், பரவெளி, பரமவெளி, அம்பலம், திருவம்பலம், பொன்னம்பலம், மன்று, தில்லையம்பலம், ஆடரங்கு என பலவாறாகக் கூறி விளக்கியுள்ளது. அப்பாடல்களில் சிலவற்றை கீழே காண்க.

அம்பலமாவது அகில சராசரம்
அம்பலமாவது ஆதிப்பிரான் அடி
அம்பலமாவது அப்புத் தீமண்டலம்
அம்பலமாவது அஞ்செழுத்தாமே. 2775

அம்பலம் = நெற்றிக் கண்ணில் வெளிப்படும்; பரவெளி அடி = கருவில் மிதித்த இறையடி; அஞ்செழுத்து = ஆத்துமா இயங்கும் சக்கரம்.

எங்குந் திருமேனி எங்குஞ் சிவசக்தி
எங்குஞ் சிதம்பரம் எங்கும்திருநட்டம்
எங்குஞ் சிவமாய் இருத்தலால் எங்கெங்கும்
தங்குஞ் சிவன் அருட்தன் விளையாட்டதே. 2722

சிதம்பரம், சித்அம்பலம், சிவமாய் = வீந்து நாதச் சக்கரம்

ஆமே பொன்னம்பலம் அற்புதம் ஆனந்தம்
ஆமே திருக்கூத்து அனவரத தாண்டவம்
ஆமே பிரளயமாகும் அத்தாண்டவம்
ஆமே சங்காரத்து அருந்தாண்டவங்களே. 887

பொன்னம்பலம் = ஒளிமயமான பரவெளி

தேவர் உறைகின்ற சிற்றம்பலமென்றும்
தேவர் உறைகின்ற சிதம்பரம் என்றுந்
தேவர் உறைகின்ற திருஅம்பலம் என்றுந்
தேவர் உறைகின்ற தென்பொதுவாமே. 887

சிற்றம்பலம் = சித் = அறிவு வெளி; பரவெளி = சித்தாகாசவெளி.

நெற்றிக்கு நேரே புருவத்திடைவெளி
உற்றுப் பார்க்க ஒளிவிடும் மந்திரம்
பற்றுக்குப் பற்றாய்ப் பரமன் இருந்திட
சிற்றம்பலமென்று சேர்ந்துகொண்டேனே. 2770

மந்திரம் = பஞ்சாட்சரம் அஞ்செழுத்துள் இயங்கும் ஓம் என்னும் இறை நாமம்.

அடியார் அரன் அடி ஆனந்தம் கண்டோர்
அடியார் ஆனவர்அத்தருள் உற்றோர்
அடியார் பவரே அடியவராமல்
அடியார் பொன்னம்பலத்து ஆடல் கண்டோரே. 2740

அரன் அடி = கருவில் மிதித்த கமலப் பாதம்; ஆத்ம சக்கரத்தின் இணையடியான அகார எழுத்து.

நந்தி அருள் பெற்ற நாதரை நாடிடின்
நந்தி கள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரமர்
என்றிவர் என்னோடு எண்மருமாமே. 67

நந்திகள் நால்வர் = சனதர், சனாதனர், சனந்தனர், சனத்குமாரர், என்னோடு –திருமூலரோடு எட்டுப்பேர்; மன்று = சித்தாகாசவெளி.

சி. இராமநாதன்

மானிடப் பிறப்பு

இவ்வுலகின் கண் பல கோடி பிறவிகள் இருக்கின்றன. ஓரறிவு முதல் ஆறறிவு வரையான பல வித பிறவிகளை நாம் காணலாம். இவை எல்லாவற்றிலும் மானிடப்பிறவியே உயர்ந்த பிறவியாக கூறப்படுகிறது. காரணம் இதற்கு ஆறாவது அறிவாகிய பகுத்தறிவு சிறப்பம்சமாக இருப்பதே. இத்தகைய பெறுதற்கரிய மானிடப் பிறப்பை பெற்று இவ்வுலகில் வாழும் நாம் இதற்கு முன் எத்தனையோ பிறவிகளை எடுத்து துன்பங்களை அனுபவித்து ஈற்றிலே இப் பிறவியைப் பெற்றுள்ளதாக பல ஞானிகள் கூறியுள்ளார்கள். மணிவாசகப் பெருமான் இதனை:

....
புல்லாகிப் பூடாகிப் புழுவாய் மரமாகி
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லா மனிதராய் பேயாய் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன்பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்
..................என்று அழகாக விளக்கியுள்ளார்.

பெறுதற்கரிய மானிடப் பிறவியை பெற்றால்மட்டும் போதாது. வேறும் பல சிறப்புத் தன்மைகள் கூடவே அமையவும் வேண்டும்.

உருவத்தில் மானிடர்போல் தோன்றினுமவர்க ளொரு
உத்தம மனிதரல்லர்
மிருகத்துக்கொப்பான மாக்களறிவுற்றவரை
ம்க்களெனப் புகழலாமோ
திருவுற்ற மனிதராய் ஒருசிலரைக் காணலாம்
அதுவும் இலட்சத்திற்கு ஒருவராக
....

என்று பாடினார் சித்ரமுத்தடிகள்

அரிது அரிது மானிடராதல் அரிது
மானிட ராயினும் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தலரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தாஞ்செயலரிது
தானமும் தவமும் தாஞ்செய்வாராயின்
வானவர் நாடு வழி திறந்திடுமே.

என்று தமிழ் தந்த மூதாட்டி அவ்வை இந்த மானிடப் பிறப்பை பற்றிக் கூறினாள். நாம் எண்ணிறந்த பிறவிகளெடுத்து, இளைத்து வருந்தி இப்போ இந்த மானிடப் பிறவியை பெற்று வாழுகிறோம். இம் மானிடப் பிறவியால் நாமடையக்கூடிய பலன் என்ன? பிறப்பிறப்பு என்ற வலையில் அகப்பட்டு வருந்தும் நாம் அதிலிருந்து விடுதலை பெற மானிடப்பிறப்பே வேண்டத் தக்கது. இதனை திருமூலர் தம் திருமந்திரம் வாயிலாகக் கூறுவதைப் பார்ப்போம்.

பெறுதற்கு அரிய பெரும் பிறவியைப் பெற்றும்
பெறுதற்கு அரிய பிரான்அடி பேணார்
பெறுதற்கு அரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற்கு அரியதோர் பேறிழந் தாரே. 2090

பிரானடி = தாயின் கருவில் மிதித்த கமலப்பாதம்

உடலில் துவங்கிய வேடம் உயிர்க்காக
உடல் கழன்றால் வேடம் உடனே கழலும்
உடல் உயிர் உண்மையென்று ஓர்ந்துகொள்ளாதார்
கடலில் அகப்பட்ட கட்டை ஒத்தாரே 1677

ஓம் எனும் இறை நாமத்தை ஆத்மா, அகாரம், உகாரம், மகாரமாகிய முப்பதத்தில் இயங்கும் உணர்வால் ஓதிப் பேரின் பத்தை அனுபவிப்பதே முத்தி நிலை. மானிடவேடம் தாங்கி வாழும் நாம் இந்த உண்மையை அறியாவிட்டால் கடலில் அகப்பட்ட கட்டை போல் தாழுவதும் மிதப்பதும் ஆய வாழ்வை நடத்துபவர்களாவோம்.

பிறப்பறி யார்பல பிச்சைசெய் மாந்தர்
சிறப்பொடு வேண்டிய செல்வம் பெறுவர்
மறப்பில தாகிய மாதவஞ் செய்வார்
பிறப்பினை நீக்கும் பெருமைபெற் றாரே. 1626

மறப்பிலர் = ஆத்மாவை உணர மறவாதவர்கள் – பிறப்பினை நீக்கும் = பிறப்பிறப்பு எனும் சுழற்சியிலிருந்து நீங்கும்

அவ்வுலகத்தே பிறக்கில் உடலொடும்
அவ்வுலகத்தே யருந்தவர் நாடுவர்
அவ்வுலகத்தே யரனடி கூடுவர்
அவ்வுலகத்தே யருள் பெறுவாரே. 1652

பிறப்பினை நீக்கும் =பிறப்பிறப்பு எனும் வலையிலிருந்து வீடுதலை பெறும்

பெறுதற்கரிய மானிடப் பிறப்பை பெற்றால் மட்டும் போதாது. பெற்றதன் பயனை அடையவும் வேண்டும். அடைய வேண்டிய பயன்தான் என்ன?

உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம்
உடம்பினில் உத்தமனைக் காண். - ஞானக் குறள்

உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம்
திடம்பட ஈசனை தேடு. - ஞானக் குறள்

அன்னத்தாலாய உடம்பின் பயனெல்லாம்
முன்னோனைக் காட்டி விடும். - ஞானக் குறள்

என்றாள் மூதாட்டி அவ்வை.

ஆம்! ஆகக்கோயிலில் அமர் ஓங்கார ஏகப் பொருளை அறிந்து, உணர்ந்து, தெளிந்து, இரண்டற்று நிற்றலே மானிடப் பிறப்பெடுத்ததன் பயன். அதுவே மரணமற்ற பெருவாழ்வு வாழ ஏற்ற வழி. சைவ சமயத்தின் முடிவான முத்தி நிலையும் இதுவே.

– ந. ஆறுமுகம்

பிரபஞ்ச உற்பத்தி

திருமந்திரம் கூறும் விளக்கம்

எண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த நந்தியின் சீடர்களில் ஒருவரான திருமூலர் தாம் அருளிச் செய்த திருமந்திர நூலில் பிரபஞ்ச உற்பத்திக்கும் சராசரங்களின் தோற்றத்திற்கும் காரணமான மெய்ப்பொருளைப் பற்றி பல பாடல்களில் விளக்கியுள்ளார்.

திருமந்திரத்தை பல நூற்றாண்டுகளாக எமது முன்னோர், மறைத்து வைத்தும் பின் திருஞான சம்பந்தர் காலத்தில் பல திருத்தங்களைச் செய்தும் புதுப்பாடல்களைப் புகுத்தியும் வெளியிட்டுள்ளதாகப் பல ஞானிகள் கூறியுள்ளார்கள்.

நான் ஆன்மஞானம் பெற்றுப் பல ஆண்டுகள் யோகப் பயிற்சி செய்த பலனால் உணர்ந்த தெளிவை பல கட்டுரை களாகவும் நூல்களாகவும் எழுதி வெளியிட்டும் தமிழ் நாட்டிலும் எமது நாட்டிலும் உரையாற்றியும் வந்துள்ளேன்.

பிரபஞ்ச உற்பத்திக்குக் காரணமான மெய்ப்பொருளைக் கீழ்க்காணும் திருமந்திரப் பாக்கள் நன்கு விளக்குகின்றன. ஆதிமூலச் சக்தியான விந்துவும், நாதமும் சக்கரங்களாய் விரிந்து சகல தோற்றங்களையும் படைத்ததாக பின்வரும் திருமந்திரங்கள் கூறுகின்றன.

விரையது விந்து விளைந்தன எல்லாம்
விரையது விந்து விளைந்தது உயிரும்
விரையது விந்து விளைந்த விஞ்ஞானம்
விரையது விந்து விளைந்தவன் தானே. 1279

தாள் = கருவில் மிதித்த கமல பாதம்

மேல் வரும் விந்துவும் அவ்வெழுத்தாய் விடும்
மேல் வரும் நாதமும் ஓங்கும் எழுத்துடன்
மேல் வரும் அப்பதி அவ்வெழுத்தே வரின்
மேல் வரும் சக்கரமாய் வரும் ஞாலமே 1258

இந்த உண்மையை ஏசுக்கிறீஸ்த்து நாதர் தமது விவிலிய நூலில் " In the beginning was the word. The word is with God. The Word is God. (ஆதியில் நாதம் (வார்த்தை) இருந்தது. அது தேவனிடம் இருந்தது. அது தேவனாய் இருந்தது) என்று கூறியிருக்கிறார்.

அருணகிரிநாதரும் " நாத விந்து கலை ஆதீ நமோ நம" என்று பாடியுள்ளார்.

இந்த விந்துநாதச் சக்கரத்தை நந்தி தன் சீடர்களுக்கு ஐந்தெழுத்தாய் "அகாரம்" "இகாரம்" "உகாரம்" "ஓங்காரம்" "மகாரம்" என்று பிரித்து விளக்கியுள்ளார்.

பதஞ்சலி மாமுனிவர் அருளிச்செய்த "யோக சூத்திரம்" என்னும் நூலில் இந்த ஐந்தெழுத்தையும் "பஞ்சாட்சர மந்திரம்" என்று விளக்குகிறது. இந்த ஐந்தெழுத்துச் சக்கரங்களே ஆத்மசக்கரங்களாய் இயங்குகின்றன. திருமூலர் இவ் ஐந்து எழுத்தின் பெருமையைக் கீழ்க்காணும் திருமந்திரங்களில் விளக்கியிருக்கிறார்.

அஞ்செழுத்தால் ஐந்துபூதம் படைத்தான்
அஞ்செழுத்தால் பலயோனி படைத்தான்
அஞ்செழுத்தாலே இவ்வகலிடம் தாங்கினான்
அஞ்செழுத்தாலே அமர்ந்து நின்றானே. 966

அஞ்செழுத்தால் = அஞ்செழுத்தாய் பிரிக்கப்பட்ட விந்து நாதச் சக்கரமாகிய ஆத்மசக்கரம், யோனி =வெவ்வேறு பிறப்புக்கள் அகலிடம் = பிரபஞ்சம்

அஞ்சுக அஞ்செழுத்து உண்மை அறிந்தபின்
நெஞ்சுகத் துள்ளே நிறையும் பராபரம்
வஞ்சக மில்லை மனைக்கும் அழிவில்லை
தஞ்ச மிதுவென்று சாற்றுகின் றேனே 980

அஞ்செழுத்தும் அகாரம் உகாரம் மகாரமாகிய முப்பதத்தில் ஓம் என்னும் இறை நாமத்தில் அடங்கியுள்ளது. இதுவே ஆத்ம தண்டாகிய பிரணவப் பொருள். மனை =ஆத்மா இயங்கும் உடல்

விந்துவும் நாதமும் மேருவில் ஓங்கிடிற்
சந்தியிலான சமாதியிற் கூடிடும்

அந்தமிலாத அறிவின் அரும்பொருள்
சுந்தரச் சோதியும் தோன்றிடும் தானே. 619

மேரு = விண்ணுலகில் வெளிப்படும் கயிலை மலை

புவனம் படைப்பான் ஒருவன் ஒருத்தி
புவனம் படைப்பார்க்குப் புத்திரர் ஐவர்
புவனம் படைப்பானும் பூமிசையானாய்
புவனம் படைப்பான் அப்புண்ணியன் தானே. 386

ஒருவன் ஒருத்தி = விந்து நாதம், புத்திரர் ஐவர் = ஐந்து எழுத்து, பூமிசை = உலகம்

உண்டு உலகேழும் உமிழ்ந்தான் உடனாகி
அண்டத்தமரர் தலைவனும் ஆதியும்
கண்டச்சது முகக் காரணன் தன்னொடும்
பண்டிவ் வுலகம் படைக்கும் பொருளே. 389

உடனாகிய = எல்லாப்படைப்புகளோடும் கலந்து நின்று
சதுமுகன் = நான்முகனாகி ஆத்மா

காரணன் அன்பிற் கலந்து எங்கும் நின்றவன்
நாரணன் நின்றநடு உடலாய் நிற்கும்
பாரணன் அன்பிற் பதஞ்செய்யும் நான்முகன்
ஆரண மாய் உலகாய் அமர்ந்தானே. 391

நடு உடல் = சுழுமுனை நாடியில் இயங்குபவன்

ஒருவனுமே உலகேழும் படைத்தவன்
ஒருவனுமே உலகேழும் அளித்தான்
ஒருவனுமே உலகேழும் துடைத்தான்
ஒருவனுமே உலகோடு உயிர்த்தானே 404

ஒருவனுமே = அஞ்செழுத்தாய் நிற்கும் விந்து

ஓரெழுத்தாலே உலகெங்கும் தானாகி
ஈரெழுத்தாலே இசைந் தங்கு இருவராய்
மூவெழுத்தாலே முளைக்கின்ற சோதியே
மாவெழுத்தாலே மயக்கமே உற்றதே. 885

ஓரெழுத்தாலே = அகாரத்தாலே , ஈரெழுத்தாலே = அகார உகாரத்தாலே மூவெழுத்தாலே = அகார உகார மகாரமாகிய ஓங்காரத்தால்

உடலில் துவங்கிய வேடம் உயிர்க்காக
உடல் கழன்றால் வேடம் உடனே கழலும்
உடல் உயிர் உண்மையென்று ஓர்ந்துகொள்ளாதார்
கடலில் அகப்பட்ட கட்டை ஒத்தாரே 1677

உடல் அழியும் பொருள். உயிர் அழியாத மெய்ப் பொருள்

அத்தன் அமைத்த உடல் இருகூறினிற்
சுத்தமாகிய சூக்குமஞ் சொல்லுங்கள்
சத்த பரிச ரூபரச கந்தம்
புத்தி மனம் ஆங்காரம் புரியட்டகாயமே. 2123

அத்தன் = மெய்ப் பொருளாகி ஆத்மா

உடம்பும் உடம்பும் உடம்பைத் தழுவி
உடம்பிடை நின்ற உயிரை அறியார்
உடம்பொடு உயிரிடை நட்பு அறியாதார்
மடம்புகு நாய்போல் மயங்குகின்றாரே. 2148

மடம்புகு = சாப்பிட்டு எறிந்த இலைக்காக ஓடும் நாய்

உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யானிருந்து ஓம்புகிறேனே. 725

உத்தமன் = இறைவன், ஓம்புகின்றேன் = ஓம்ஓம் என்று உரைத்துக்கொண்டு இயங்குகின்றேன்

தானே திசையொடு தேவருமாய் நிற்கும்
தானே உடல் உயிர் தத்துவமாய் நிற்கும்
தானே கடல் மலை ஆதியுமாய் நிற்கும்
தானே உலகில் தலைவனுமாமே. 725

தானே = விந்து நாதச் சக்கரத்தில் இயங்கும் ஆத்மாவே

தானே வெளியென எங்கும் நிறைந்தவன்
தானே பரம வெளியது வானவன்
தானே சகலமும் ஆக்கி அழித்தவன்
தானே அனைத்துள் அண்ட சகலமே. 1361

வெளி=பிரபஞ்சவெளி – பரமவெளி =விண்வெளி ஆக்கி =படைத்து

– சி. இராமநாதன்

மந்திரத் தமிழ்

10ம் திருமுறையாம் திருமந்திரம்

– வித்துவான் திருமதி.வசந்தா வைத்தியநாதன் –

இந்து மதத்தின் மிகஉயர்ந்த நெறி வேத நெறி. வேதத்தின் சாரமே ஆகமம். ஆகம திட்பநுட்பங்களை செறிந்தினிது விளக்கும் செவ்வன்னாடியாக விளங்குவது திருமந்திரம் என வழங்கும் திருமந்திரமாலை:

" தண்ணிலவார் சடையார்தாம் தந்தஆ கமப்பொருளை
மண்ணின் மிசைத் திருமூலர் வாக்கினால் தமிழ்வகுப்ப"

எனச் சேக்கிழார் பெருமான் போற்றுவார். இதனால் திருமந்திரம் "தமிழ் ஆகமம்" எனக் கூறப் பெறுகின்றது. திருமந்திரத்தில் கூறப்பெறாத பொருளே இல்லை எனலாம்.

"அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்" என்பது திருக்குறளுக்கு மட்டும் சிறப்புப் பயப்பதாக அமையாது, திருமந்திரத்திற்கும் அதுபொருந்தும். இந்நூல் சாத்திரத்தில் சாத்திரமாயும், தோத்திரத்தில் தோத்திரமாயும் இலங்குவது. வடமொழியில் வேதம் பொதுநூல். ஆகமம் சிறப்பு நூல். அதுபோன்று திருக்குறள் பொதுநூல். திருமந்திரம் சிறப்பு நூல். திருக்குறள் அறநூல் ஆதலின் அறத்தை அது முதன்மையாகக் கூறி வீடுபற்றி சிறிதளவே கூறுகின்றது. ஆனால் திருமந்திரமோ வீட்டினையே சிறப்பாக விளக்கி நிற்கின்றது. ஆதலால் இதனை "வீட்டுநூல்" என்றே அழைக்கலாம். இதன் சிறப்பை உணர்ந்தே ஔவை மூதாட்டியும்,

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திரு வாசகமும் திருமூலர் சொல்லும்
ஒரு வாசகம் என்றுணர்.

என்று அறிவுறுத்துவார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளும் "நம்பிரான் திருமூலன்" என ஏற்றம் கொடுத்தே அறிமுகப்படுத்துகின்றார்.

திருமந்திரத்திற்குள்ள பல சிறப்புக்களில் இது ஒரு சிறந்த ஆன்மநூல் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இதனை ஏன் ஆன்ம நூல் எனக்குறிப்பிடுகின்றேன். என்பதற்கு இதனுடைய அமைப்பே சான்று பகரும்.

திருமுறைகளின் வைப்பமைப்பில் திருமந்திரம் பத்தாம் திருமுறையாகும். பத்து என்ற எண்ணின் தமிழ் வரிவடிவம் "ய"-யகரம் ஆன்மாவைக் குறிக்கும் குறியீடாகும். மலம் நீங்கும் பொருட்டுப் பிறப்பினைக் கொடுத்துத் தொழிற்படுத்துவது "நமசி வய"என்னும் திருவைந்தெழுத்து. இங்கு "ந" என்பது திரோதான (மறைப்புச்) சக்தியையும்,"ம" என்பது மலத்தையும் "சி" என்பது சிவத்தையும்,"வ"என்பது அருட்சக்தியையும்,"ய" என்பது ஆன்மாவையும் குறிக்கும் என்பது சைவ சமயத்தவர் அறிந்ததே.

பத்தாந் திருமுறையாக அமைந்துள்ள திருமந்திரமும் ஆன்மாக்களது மலத்தைக் கெடுத்து, பரிபாகப்படுத்தி, இறைவனது திருவருளிலே சேர்ப்பிக்கும் ஆற்றலுடைய "ய" என்ற எழுத்தை ஆன்மா வாகவும் பத்து என்ற எண்ணாகவும் கொண்ட ஒரு பழைய பாடல்:-

"ஆவி யீரைந்தை அபரத்தே வைத்தோதில்
ஆவி யீரைந்தை அகற்றலாம் - ஆவியீர்
ஐந்தறலாம் ஆவியீர் ஐந்துறலாம் ஆவியீர்
ஐந்திடலாம் ஓரிரண்டோடு ஆய்ந்து."

இப்பாடலின் பொருள் :-ஆவியீரைந்தை - ஆன்மஎழுத்தாகிய யகரத்தை; அபரத்தே - இறுதியில்; வைத்தோதில் - "சி" கரத்திற்கும் "வ" கரத்திற்கும் இறுதியில் வைத்து "சிவய" என்று ஓதினால்; ஆவியீரைந்தை அகற்றலாம் - "ஆ"வுடன் ஈரைந்தாகிய பத்தை இணைத்தால் ஆபத்து - (உடலுக்கு) "வி"யுடன் பத்தை இணைத்தால் விபத்து (உயிருக்கு) ஆபத்தையும், விபத்தையும் அகற்றலாம்; ஆவியீர் ஐந்தறலாம் - ஆணவம், கன்மம், திரோதானம்; மாயை மாயேயம் ஆகிய பஞ்சமலங்களும் நீங்கும்; ஆவியீர் ஐந்துறலாம் -நிவிர்த்தி கலை; பிரதிஷ்டா கலை; வித்யா கலை- சாந்தி கலை - சாந்தியாதீதக் கலை என்ற பஞ்சகலா மயங்களாகலாம்; ஆவியீரைந்தோடு ஓரிரண்டு ஆய்ந்திடலாம் - ஆவியாகிய பிராண வாயு 12 அங்குலம் வெளியே வீணாகக் கழிகின்றது. அதனைத் தடுத்து உள்ளே செலுத்தலாம்.

பத்தாந் . திருமுறையாகிய மந்திரத்தமிழை நாளும் ஓதினால் அளவற்ற நன்மைகளைப் பெறலாம்.

"சக்கர வர்த்தி தவராச யோகியெனும்
மிக்கதிரு மூலனருள் மேவு நாள் எந்நாளோ"!

- தாயுமானவர்.

திருமந்திரமும் நற்சிந்தனையும் ஒன்றே

இற்றைக்குச் சுமார் எண்பது நூற்றாண்டுகட்கு முன் வாழ்ந்த திரிகால ஞானியான நந்திதேவரின் மாணவரும் திருமந்திரம் என்னும் ஆன்ம ஞானநூலை ஆக்கியவருமான திருமூலரையும், இருபதாம் நூற்றாண்டில் எமது ஈழநாட்டில் வாழ்ந்து ஞானஒளி பரப்பிய கலாதீதரான சிவயோக சுவாமி களையும் வழிகாட்டிகளாக கொண்டு திரு. சி. இராமநாதன் தமது ஆத்மீக வாழ்வைத் தொடங்கி அயராத முயற்சியின் பயனாக ஆன்மஞானம் பெற்று, திருமந்திரத்தையும் யோகர் ஆக்கியளித்த நற்சிந்தனையையும் ஒப்பிட்டு "திருமந்திர அடிப்படையில் யோகர்சுவாமிகள் அறிவுரைகள்" எனும் நூலை எழுதினார்கள். அந்நூலை ஆக்கியளித்தமைக்காக இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் திரு. இராமநாதன் அவர்களுக்கு சான்றிதழும் பொற்கிழியும் வழங்கிக் கௌரவித் துள்ளது. அந்நூலிலிருந்து சில பகுதிகள் கீழே தரப்படுகின்றன.

திருமந்திரமும் நற்சிந்தனையும் ஒரே கருத்தை விளக்குவன. திருமந்திரத்தைவிட நற்சிந்தனை கற்றற்கு எளிமையாக இருக்கிறது. அதன் நுண்மையும் பெருமையும் திருமந்திரத்துடன் ஒப்புநோக்கும் போதுதான் புலனாகிறது.

திருமந்திரம்: 2355

தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தான் இருந்தானே.

நற்சிந்தனை: 5/189

தன்னை அறியத் தனக்கொரு கேடில்லையென
முன்னைப் பெரியோர் மொழிந்தனரால் - தென்னைபனை
சேரிலங்கை வாழுஞ் சிவநேயச் செல்வர்காள்!
தேரீர் சீவன் சிவன்.

"தேரீர் சீவன் தான் சிவன்" என்று சிவயோகசுவாமிகள் மட்டுமே தெளிவாகவும் வெளிப்படையாகவும் கூறியிருக்கிறார்.

திருமந்திரம்: 2017
சீவனென்ன சிவனென்ன வேறில்லை
சீவனார் சிவனாரை அறிகிலார்
சீவனார் சிவனாரை அறிந்தபின்
சீவனார் சிவனாய் இட்டிருப்பாரே.

நற்சிந்தனை: 5/258
சீவனே சிவமென்று பெரியோர் - சிவசிவா
செப்பிய மொழியை ஒப்புக்கொள் அறிவாய்.

நற்சிந்தனை: 10/113
சீவன் சிவனென்று தேறித் தெளிந்தவர்க்கு
அபாய மில்லையென் றுந்தீபற
அன்பே சிவமென் றுந்தீபற.

திருமந்திரம்: 270
அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

திருமந்திரம்: 2366
என்னை அறிந்திலேன் இத்தனை காலமும்
என்னை அறிந்தபின் ஏதும் அறிந்திலேன்
என்னை அறிந்திட்டிருத்தலும் கைவிடாது
என்னை இட்டு என்னை உசாவுகின்றானே.

நற்சிந்தனை: 10/113
என்னை எனக்கு அறிவித்தான் எங்கள் குருநாதன் ....
பார்ப்பதெல்லாம் நீ யென்றான் எங்கள் குருநாதன் ....
சீவன் சிவன் என்றான் எங்கள் குருநாதன் ....
எல்லாம் நீ என்றுரைத்தான் எங்கள் குருநாதன் ....
தன்னைத் தன்னால் அறிந்திட வேண்டும்.

ஆதலால் மனிதப் பிறப்பெடுத்த நாம் இவ்விருநூல்களில் ஒன்றையேனும் கற்று, காலனை வென்று, பிறப்பிறப்பென்னும் வலையில் சிக்காது கடைத்தேற முயல்தல் வேண்டும்.

— ஆ. அரசரத்தினம்

மங்களம்

அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம்
அத்துவித வஸ்துவுக்கு மங்களம்
ஒப்பில் குருநாதனுக்கு மங்களம்
உத்தம பத்தருக்கு மங்களம்
முப்பொழுதும் தொழுவார்க்கு மங்களம்
மூவாசை வென்றவர்க்கு மங்களம்
முப்பத்து முக்கோடி தேவர்க்கும் மங்களம்
முனிவர்க்கும் இருடிகட்கும் மங்களம்
தன்னைத் தன்னால் அறிந்தவர்க்கு மங்களம்
ஐயமிட்டு உண்பவர்க்கு மங்களம்
ஐயமில்லாச் சாதுக்கட்கு மங்களம்.
ஆதியந்தம் இல்லாத ஆன்மாவுக்கு மங்களம்
எங்குந் தங்கும் உயிர்களுக்கு மங்களம்
மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்

ஆழிசூழுலகமெல்லாம் அமைதி மேவ,
ஆகாத பகை யொழிந்து அன்புண்டாக,
ஆராத கவலை பிணி அகன்றுபோக,
ஆக்கமொடு மக்கள் குலம் அழகாய் வாழ,
ஆண்டவனை வேண்டுதல் செய்தருளை நாடி,
ஆனந்தத் தவநிலையை அணுகுவோமே.

COLOURDOTS, 31/21, Dawson Street, Colombo 2. Tel: 331439